# கிறிஸ்துவின் சரீரத்தை *நடைமுறையில்* கட்டியெழுப்புதல்

Transcribed from a message spoken on September 6, 2015 in Chennai

By *R.S.Milton*

*கிறிஸ்துவின் சரீரத்தை நடைமுறையில் கட்டியெழுப்புவது எப்படி* என்ற கருத்தைப்பற்றி நாமெல்லாரும் சற்று ஆராய்ந்து படிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். "கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவது" என்று நான் சொல்லவில்லை. "கிறிஸ்துவின் சரீரத்தை **நடைமுறையில்** கட்டி யெழுப்புவது" என்று குறிப்பிட்டேன். நடைமுறையில் என்பது அனுபவத்திற்குரியது; அது நம் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையது. கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புகிற வேலையை எங்கோ, யாரோ செய்யப்போகிறார்கள் என்பதல்ல. கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புகிற வேலையை ஒவ்வொருநாளும் நாம்தான் செய்கிறோம்; நம் நடைமுறை வாழ்க்கையிலும், அனுபவத்திலும் நாம் அதைச் செய்கிறோம்.

### வேதத்தை ஆராய்தல்

தேவனுடைய வார்த்தையிலே சில கருத்துக்களைப்பற்றியும், சில உண்மைகளைப்பற்றியும் நாம் தீர ஆராய்ந்து, ஒரு அறிவைப் பெறுவது மிகவும் அவசியம். நீங்கள் இதை நம்புகிறீர்களா? ஒருவேளை ஒரு குறிப்பிட்ட கருத்தைப்பற்றி தீர ஆராய்ந்து ஒரு புரிந்துகொள்ளுதலுக்கு வர விரும்புகிறேன் அல்லது ஒரு அறிவை அடைய விரும்புகிறேன் என்றால் இது சாத்தியமா? இதை நாம் செய்ய முடியுமா? அல்லது, "இல்லை, சகோதரனே, பரிசுத்த வேதம் மிகவும் ஆழமானது. எனக்கு ஒரு குடும்பம் இருக்கிறது; ஒரு வேலை இருக்கிறது; பொறுப்புகள் அதிகம் உள்ளன. அதனால் நான் இதைத் தீர ஆராய்ந்து ஒரு முடிவுக்கு, ஒரு புரிந்துகொள்ளுதலுக்கு, ஒரு அறிவுக்கு வருவது கூடாத காரியம்," என்று நினைக்கிறீர்களா? "இதெல்லாம் வேதபண்டிதர்களுக்கும், வேத அறிஞர்களுக்கும், நான்கு வருடம் எட்டு வருடம் என்று இதையே தொழிலாய்க்கொண்டு வேதாகமக் கல்லூரிகளிலே படிப்பவர்களுக்குத்தான் முடியும்; என்னைப்போன்ற பாமரர்களுக்கும், சாமானியர்களுக்கும் இது சாத்தியம் இல்லை," என்று நினைக்கிறீர்களா? அல்லது "இல்லை, எனக்கொரு வேலை இருக்கிறது; குடும்பம் இருக்கிறது; இந்த உலக வாழ்க்கையிலே பொறுப்புகள் உள்ளன. ஆனபோதிலும் ஒரு குறிப்பிட்ட காரியத்திலே தேவனுடைய எண்ணம் என்ன, தேவனுடைய கருத்து என்ன என்பதைத் தீர ஆராய்ந்து முடிவுக்கு வர முடியும். இது சாத்தியம்; எனக்கு இது சாத்தியம்," என்று நினைக்கிறீர்களா?

புதிய ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட காரியத்தைக்குறித்து என்ன சொல்கிறது என்று அறிந்துகொள்ள ஒரு மனிதன் உண்மையிலேயே ஆர்வமாகவும், வாஞ்சையாகவும் இருந்தால் ஏறக்குறைய ஒரு வாரத்தில் அவன் அதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். சில கருகலான காரியங்கள் உள்ளன என்பதை நான் மறந்துபோகவில்லை. "புதிய ஏற்பாட்டிலே எந்த கருத்தைக் எடுத்துக்கொண்டாலும் நாம் ஒரு வாரத்திலே படித்துக் கரைகண்டுவிடலாம்," என்று நான் சொல்லவில்லை. பெரும்பாலான காரியங்களை நாம் தீர ஆராய்ந்து ஒரு புரிந்துகொள்ளுதலுக்கும், முடிவுக்கும், அறிவுக்கும் வரமுடியும்.

"பணக்காரனாவது எப்படி?" என்பதை வேதத்தை ஆராய்ந்து பார்த்து கண்டுபிடிக்க முடியுமா முடியாதா? தாராளமாய் முடியும். "இந்த உலகத்திலே ஒரு தலைசிறந்த கோடிஸ்வரனாய் மாறுவது எப்படி?" என்பதை அறிந்துகொள்ள ஒருவன் வேறு எந்தப் புத்தகத்தையும் படிக்க வேண்டாம். அவன் வேதாகமத்தைப் படித்தால் போதும். வேதாகமத்தை இதற்கென்றே படிக்கிற ஆட்கள் உண்டு. சில கோட்பாடுகளின்படி ஒரு மனிதன் வாழ்ந்தால், உழைத்தால், பிரயாசப்பட்டால் அவன் நிச்சயமாக ஒரு ஐசுவரியவானாக, ஒரு செல்வந்தனாக, மாறுவான். அந்தக் கோட்பாடுகளெல்லாம் வேதத்திலே தெள்ளத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. "வரவுக்கு மீறி அவன் செலவு செய்யக்கூடாது. தன் வரவிலே எப்போதும் ஒரு பங்கை அவன் சேர்த்துவைக்க வேண்டும், சேமிக்க வேண்டும். தன் வரவிலே ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்கும், தேவனுடைய காரியங்களுக்கும் ஒதுக்கிவைக்க வேண்டும். எக்காரணத்துக்காகவும் அவன் அநீதியாய் பொருள் ஈட்டக்கூடாது. தேவன் கொடுத்த வேலையிலே அவன் பிரயாசப்பட வேண்டும். தேவன் ஒரு துண்டு நிலத்தைக் கொடுப்பாரென்றால் அந்த நிலத்திலிருந்து கனி கிடைக்கிறவரை அந்த நிலத்தை அவன் கொத்திக்கொண்டே இருக்க வேண்டும்". இப்படி ஐந்து, பத்து கோட்பாடுகள் தேவனுடைய வார்த்தையில் இருக்கும். இதை ஒருவன் கைக்கொள்வானென்றால் அவனைப்போல பணக்காரன் வேறு யாரும் இருக்க மாட்டான். ஆனால், இதுபோன்ற கருத்துக்களைத் தீர ஆராய்ந்து ஒரு முடிவுக்கும், அறிவுக்கும், புரிந்துகொள்ளுதலுக்கும் வருவதற்கு நான் பிரயாசப்படுவது இல்லை. இது அநாவசியம் என்பதினால் இல்லை. கண்டிப்பாக தேவனுடைய மக்களைப் பொறுத்தவரை அவர்கள் பொருளாதார வாழ்க்கை

யிலே நேர்த்தியாக இருக்க வேண்டும். அது முக்கியமா, முக்கியமில்லையா? தேவ மக்களுடைய பொருளாதார வாழ்க்கை நேர்த்தியாக இல்லை யென்றால் அவர்கள் வாழ்க்கை சின்னாபின்னமாகி விடும். "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனிதரைக் கேட்டி லும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்," *(1 தீமோ. 6:9-10)* என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். ஆண்டவராகிய இயேசுவின் பெயரைச் சொல்லிக் கொண்டு தங்கள் பொருளாதார வாழ்க்கையை கெடுத்துக்கொள்கிற மக்களும் உண்டு.

## தலையாய காரியங்களை ஆராய்தல்

எல்லாக் காரியங்களையும் ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் நேரம் செலவிட முடியாது. ஆனால், சில தலையாய காரியங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று *கிறிஸ்துவின் சரீரம். கிறிஸ்துவின் சரீரம் என்பது தேவனுடைய மக்கள் ஆவிக்குரிய முறையில் ஒருவரோடொருவர் உறவுபடுத்தப்பட்ட ஓர் உயிரி. தேவனுடைய மக்கள் ஆவிக்குரிய முறையில் ஒருவரோடொருவர் உறவுபடுத்தப்பட்டுள்ள ஒரு நிலைதான் கிறிஸ்துவின் சரீரம் அல்லது சபை.* நூறுபேர் கொண்டதுதான் கிறிஸ்துவின் சரீரம் என்பதல்ல. ஒரு கணவனும் மனைவியுமால் ஆனதும்கூட கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு சிற்றுரு. ஆகவே, கிறிஸ்துவின் சரீரத்தை நடைமுறையில் கட்டியெழுப்பக்கூடிய கோட்பாடுகள் சபைக்கு மட்டுமல்ல, அது குடும் பத்திற்கும் பொருந்தும். ஆகவே, நீங்கள் அக்கறையோடு இதைக் கவனிக்க வேண்டும்.

"இது எங்கேயோ ஒரு போதகர் ஒருவர் இருப்பார்; நூறுபேர் இருப்பார்கள். வெற்றிகரமாக ஒரு பாஸ்டராக இருப்பது எப்படி என்பதைப்பற்றி நான் பேசுகிறேன்," என்று நீங்கள் தவறாக நினைத்து விட வேண்டாம். வெற்றிகரமான பாஸ்டர் என்றால் அவர் ஐநூறுபேரைப் "பிடிக்க" வேண்டும்; ஒரு கட்டிடம் இருக்க வேண்டும்; அவருக்குக் கவலையில்லாத ஒரு பொருளாதார வசதி இருக்க வேண் டும்; வாழ்க்கையிலே ஒரு உலகத் தொழில் புரிகின்ற மனிதனுக்கு என்னென்ன வசதிகளும், வாய்ப்பு களும் உண்டோ அந்த எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இயேசுகிறிஸ்துவை சேவிக்கிற இந்த நபருக்கும் இருக்கும். அப்பொழுது அவர் ஒரு வெற்றிகரமான ஒரு போதகர் என்று அழைக்கப்படு வார். ஒரு உலகத் தொழில் புரிகின்ற மனிதனுக்கு இருக்கின்ற எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இயேசு கிறிஸ்துவை சேவிக்கிற அவருடைய பணியாள், அதாவது அவருடைய அடிமைக்கும் இருக்குமென்றால் அது தவறு. இயேசுகிறிஸ்துவின் பணியாள், இயேசுகிறிஸ்துவின் அடிமை, என்ப வன் தன் எஜமான் நடந்த அதே அடிச்சுவடுகளில் நடப்பவன். நம் எஜமான் தாம் தேவனாயிருந்தும் தேவனாயிருக்கிற நிலைமையை உரிந்துபோட்டு அடிமையின் ரூபமெடுத்தவர். எனவே, அவருடைய பணியாள், அவருடைய ஊழியன், அதே அடிச்சுவடுகளில் நடப்பவன். தனக்குரிய எல்லாவற்றையும் உரிந்துபோட்டு அவன் ஓர் அடிமையின் இடத்தை எடுத்துக்கொள்வான்.

ஆகவே, கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவதின் கோட்பாடுகள் சபைக்கும் பொருந்தும், குடும் பத்துக்கும் பொருந்தும். ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லையென்றால் நாம் கிறிஸ்து வின் சரீரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந் தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" *(1 தீமோ. 3:5)* என்று அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கிறார். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை விசாரிக்க வேண்டும், நிர்வாகம் பண்ண வேண்டும், தன் பிள்ளைகளை நிர்வகிக்க வேண்டும்; நிர்வகிப்பது என்றால் பிரம்பை வைத்தல்ல அல்லது நிர்வகிப்பது என்றால் கேட்பதையெல்லாம் கொடுப்பதல்ல. ஒன்று பிரம்பு, இன்னொன்று கேரட். எப்போதுமே எல்லாம் திட்டவட்டமாக இருக்க வேண்டும் என்பது பிரம்பு. எப்போதுமே கேட்ட தெல்லாம் கொடுக்கப்படும் என்பது கேரட். அப்படியல்ல. குடும்பமும் அதுவல்ல. கிறிஸ்துவின் சரீர மும் அதுவல்ல.

## ஆரம்பம்

நான்கு, ஐந்து குறிப்புகளை நான் வைத்திருக்கிறேன். எல்லாக் குறிப்புகளையும் நான் இன்று முடிக் கப்போவதில்லை. இது நம் வாழ்க்கையை மிகவும் பாதிக்கக்கூடிய ஒன்று. நான் ஏற்கெனவே சொன் னதுபோல *கிறிஸ்துவின் சரீரம் என்பது தேவனுடைய மக்கள் ஒருவரோடொருவர் ஆவிக்குரிய நிலைமையிலே உறவுப்படுத்தப்பட்ட நிலைமை.* கொஞ்சம் கடினமான வார்த்தைகளாக இருக்கலாம். ஆனால், நீங்கள் இதைக் குறித்துக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வாரமும் நாம் கூடிவரும்போது முதலாவது நாம் கற்றுக்கொண்டதை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளலாம். நீங்கள் படிக்க வேண்டாம்; தயவுசெய்து ஆராய்ச்சி செய்யுங்கள். புதிய ஏற்பாட்டை இந்தக் கண்ணோட்டத்தோடு ஒருசில தடவைகள் வாசித்துப் பாருங்கள். இதை ஒரேவொரு ஆள் ஆராய்ச்சிபண்ணிப் பார்த்து ஒரு முடிவுக்கு வர முடியாது. தேவன் இங்கே இருக்கிற தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் நல்ல கூர்மையான அறிவுத்திறனை கொடுத்திருக்கிறார். நாம் எல்லாரும் படித்துப் பார்த்து, நம் பங்கைக் கொண்டுவந்து பகிர்ந்துகொள்வோமென்றால் நம் புரிந்துகொள்ளுதல் எவ்வளவு மேன்மையானதாக இருக்கும்! "பெரேயாவில் உள்ளவர்கள் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்," *(அப். 17:11)* என்று எழுதியிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? "அந்தப் பட்டணத்தார் பவுல் சொல்லிய காரியங்களை, வசனங்களை மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தார்கள்" *(அப். 17:11)*. எனவே, அவர்கள் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாய் இருந்தார்கள்".

"இல்லங்க; வேதத்தை ஆராய்ந்து படித்து, ஆராய்ச்சிசெய்வதினால் ஒன்றும் நற்குணமெல்லாம் வந்துவிடாது. ஏனென்றால், வேதத்தைப் படித்து, ஆராய்ச்சிசெய்கின்ற பல பண்டிதர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களிடத்தில் நற்குணம் இல்லை," என்று ஒருவேளை நீங்கள் சாக்குப்போக்குச் சொல்லலாம். வேதத்தைப் படித்து, ஆராய்ச்சி செய்கிற சில பண்டிதர்களுக்கு நற்குணம் இல்லை என்பதால் நான் வேதத்தைப் படித்து ஆராய வேண்டிய அவசியமில்லை என்பதல்ல பொருள். அவர்கள் படித்து ஆராய்ந்து பார்த்தும் அவர்களுக்கு நற்குணம் உண்டாகாமல் போயிருக்கலாம். ஆனால், உண்மையாகவே பரிசுத்த ஆவியானவருக்குப் பணிகின்ற, கீழ்ப்படிகின்ற இருதயமுள்ள மக்கள் தேவனுடைய வார்த்தையைப் படித்து, ஆராய்ந்து பார்க்கும்போது உண்மையிலேயே அவர்கள் நற்குணசாலிகளாய் மாறுவார்கள். நாம் நற்குணசாலிகளாய் ஆக விரும்புகிறோம் என்றால் நாம் நிச்சயமாக தேவனுடைய வார்த்தையைப் படித்து ஆராய வேண்டும்; தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

எனவே, நீங்கள் பொறுமையாய் இந்த வாக்கியங்களை குறித்துக்கொள்ளுங்கள். உங்கள் வீடுகளுக்குப்போய், **இதை** நீங்கள் படித்து ஆராயுங்கள் என்று நான் சொல்லவில்லை. இதை **அடிப்படையாக வைத்து** ஆராய்ந்து பார்த்து உங்கள் எண்ணங்களை நீங்கள் கொண்டுவாருங்கள். நாம் இதை மூன்று மாதத்திற்குப் பொறுமையாய்ப் படிப்போம். அது நமக்கும் பயனுள்ளதாய் இருக்கும்; நம்மிடம் விசாரித்துக் கேட்பவர்களுக்கு சாந்தத்தோடும் வணக்கத்தோடும் பதிலளிப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும். நம் நம்பிக்கையை விசாரித்து கேட்கிற யாவருக்கும் நாம் பதிலளிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். எப்படிப் பதிலளிக்க வேண்டும்? சாந்தத்தோடும் வணக்கத்தோடும் நாம் பதிலளிக்க வேண்டும். "நான் இப்படித்தான் பதிலளிப்பேன். விருப்பம் என்றால் கேட்டுக்கொள்; விருப்பம் இல்லையென்றால் போ," என்கிற பாணியில் பேசுவது நற்செய்தி அறிவிக்கும் பணியாளின் ஆவியோ, மனப்பாங்கோ அல்ல. நற்செய்தி அறிவிக்கிற ஒரு பணியாள், அடிமையினுடைய மனப்பாங்கு "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாம் ஆனேன்," *(1 கொரி. 9:22)* பவுல் கூறுகிறார். "யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக்கு கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன்," *(1 கொரி. 9:20, 21)*.

இதை நான் தொடங்குகிறேன். நான் தொடங்குகிறேன் என்று சொல்லும்போது நீங்கள் மேற்கொண்டு படித்து ஆராய்ந்துபார்ப்பதற்கு தருகின்ற குறிப்புகளாகத்தான் நீங்கள் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். "நான் படித்து, ஆராய்ந்து, கரைதேறிவிட்டேன்," என்கிற மனப்பாங்கோடு இந்தக் குறிப்புகளை உங்களிடத்தில் நான் பகிர்ந்துகொள்ளவில்லை. என் முடிவுரையை நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நீங்கள் படிப்பதற்கும் ஆராய்ந்துபார்ப்பதற்கும் குறிப்புரைகளை உங்களுக்கு நான் தருகிறேன். எனவே, நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டும்.

### கிறிஸ்துவின் பரிபூரணம் அவருடைய சரீரத்தில் உள்ளது

முதலாவது, *கிறிஸ்துவின் பரிபூரணம் அவருடைய சரீரத்தில் உள்ளது*. இது என் முதல் குறிப்பு. நீங்கள் ஆராய்ந்து பார்ப்பதற்கு இது முதல் குறிப்பு. கிறிஸ்துவின் பரிபூரணம் அவருடைய சரீரத்தில் உள்ளது. சரீரம் என்றவுடனே அது எங்கேயோ இருக்கிறது என்று கற்பனை செய்துவிட வேண்டாம். *தேவனுடைய மக்கள் எல்லாராலும் தொகுக்கப்பட்டதுதான் அவருடைய சரீரம்*. எனக்குத் தேவையான

கிறிஸ்துவின் பரிபூரணத்தைக்கூட அவர் என்னில் மட்டும் வைக்கவில்லை. எனக்குத் தேவையான கிறிஸ்துவின் பரிபூரணத்தை அவர் சரீரத்தின் மற்ற அவயவங்களுக்குள், பரிசுத்தவான்களுக்குள் வைத்திருக்கிறார். எனக்குத் தேவையானதை என்னிடமே கொடுத்துவிட்டாரென்றால் நான் இனிமேல் தண்ணீர் மொள்ள கிணற்றிற்கு வராமல் வீட்டிலேயே இருந்துவிடுவேனே! யோவான் 4ஆம் அதி காரத்திலே சமாரியப்பெண் குறிப்பிடுவதுபோல, “ஐயோ! அந்தத் தண்ணீரை நீர் எனக்குக் கொடுக்க வேண்டும்”. அவளுடைய ஆவல், ஏக்கம் என்னவென்று கேட்டால், “அதை எனக்குக் கொடுத்து விட்டீர் என்றால், இனிமேல் ஒவ்வொருநாளும் தண்ணீர் எடுப்பதற்கு நான் கிணற்றிற்கு வரவேண்டிய அவசியம் இல்லையே! எனக்குத் தேவையான கிறிஸ்துவின் பரிபூரணத்தையெல்லாம் நானே பெற் றுக்கொள்வது எப்படி என்கிற இரகசியத்தை நீர் சொல்லிவிட்டீர் என்றால் மற்றவர்களோடு தொடர்போ, உறவோ, உறவாடுதலோ, ஐக்கியமோ, நட்புறவோ வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையு!” மற்றவர்களோடு உறவாடுவதும், நட்புறவுகொள்வதும், ஐக்கியம்கொள்வதும் எளிமையானதா கடினமானதா, இன்பமானதா துன்பமானதா? “எளிமையானது” என்று சொன்னீர்களா? உண்மையிலேயே பரிசுத்த ஆவியினால் நிறைந்து இதை நீங்கள் சொல்கிறீர்கள். பரிசுத்த ஆவியானவர் கொஞ்சம் குறைந்தால்கூட, “ரொம்ப கஷ்டம்,” என்போம்.

கிறிஸ்துவின் பரிபூரணம் என்று ஒன்று உண்டு. இதைக்குறித்து நாம் பரவசமடைய வேண்டும். இதைக்குறித்து நாம் பலமுறை பேசியிருக்கிறோம். தேவனுடைய வளங்கள், பரம வளங்கள் எல்லா வற்றையும் மனிதன் பெற வேண்டும், மனிதன் அனுபவிக்க வேண்டும், அனுபவித்து மகிழ வேண்டும் என்பது தேவனுடைய ஆவல், தேவனுடைய ஆசை, தேவனுடைய விருப்பம்.

**பரம வளங்கள்**

மனிதனுக்குத் தேவையான எல்லா வளங்களும் இந்த மண்ணில் இருக்கிறது. உண்மையா, பொய்யா? புரதச்சத்து மண்ணில் இருக்கிறது; புரோட்டீன் மண்ணில் இருக்கிறது; கனிமங்கள் மண் ணில் இருக்கின்றன; வைட்டமின்ஸ் மண்ணில் இருக்கிறது. இதற்கு ஐசுவரியங்கள், வளங்கள் என்று பெயர். கடவுள் எவ்வளவு ஞானமுள்ளவர். மனிதன் அனுபவித்துமகிழ வேண்டிய, துய்ப்பதற்கு வேண்டிய, இன்புறுவதற்கு வேண்டிய எல்லா வளங்களையும் இந்த மண்ணிலே வைத்திருக்கிறார். நாம் நேரே மண்ணைச் சாப்பிட முடியுமா? சாப்பிட முடியாது. ஆனால், கடவுள் தம் ஞானத்தினாலே அந்த ஐசுவரியங்கள், அந்த செல்வங்கள், அந்த வளங்களையெல்லாம் நாம் அனுபவிப்பதற்காகத் தாவரங்களை உண்டாக்கினார். ஒரு தாவரம் அந்த இரும்புச்சத்தை எடுத்து ஒரு காயாகக் கொடுக் கிறது அல்லது இரும்புச்சத்தை எடுத்து ஒரு இலையாகக் கொடுக்கிறது. இன்னொரு தாவரம் பொட்டாசியத்தை எடுத்து ஒரு கனியாகக் கொடுக்கிறது. இன்னொரு தாவரம் மேங்கனீசை எடுத்து ஒரு கனியாகக் கொடுக்கிறது. இன்னொரு தாவரம் புரோட்டீனை எடுத்து ஒரு சிறு இலையாகக் கொடுக்கிறது. தேவனுடைய ஞானம் எவ்வளவு பெரியது!

அதுபோல தேவனுடைய வளங்கள், செல்வங்கள், ஐசுவரியங்கள் எல்லாவற்றையும் மனிதனுடைய இந்த வாழ்க்கைக்கு மட்டுமல்ல, நித்தியத்திற்கும் தேவையான எல்லா ஐசுவரியங்களும், செல்வங் களும், வளங்களும் தேவனில் உள்ளன. அதை நாம் நேரடியாகப் பெற முடியாது. மண்ணிலிருந்து எப்படி நேரடியாக பெற முடியாதோ அதுபோல தேவனிடமிருந்து நேரடியாயப் பெற முடியாது. ஆனால், தேவன் அதை மனிதனுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளார், துடிக் கிறார். தம் வளங்களையெல்லாம் மனிதன் ஒருவனும் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று அவர் துடிக்கவில்லை.

பொதுவாக மனிதனுடைய இருதயம் மிகக் குறுகினது. “எனக்கு ஒன்று கிடைத்துவிட்டதென்றால் அது மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடாது. எனக்குக் கிடைத்தது அவனுக்கும் கிடைக்கக்கூடாது. எனக்கு அமெரிக்காவில் அட்மிஷன் கிடைக்கிறது. என்னுடன் படிப்பவர்க்கும் அதே பல்கலைக் கழகத்தில் அட்மிஷன் கிடைத்தால் அதனால் எனக்கு என்ன பெருமை!” என்றுதான் மனித மனம் நினைக்கும். நான் சொல்கிறது உண்மை; பொய்யல்ல. ஒரு மாணவன் தனக்கு அட்மிஷன் கிடைத் ததை யாருக்கும் சொல்லவில்லை. நான் அதற்கான காரணத்தைக் கேட்டேன். “சொன்னால் ஏதாவது ஆகிவிடும்; அதனால்தான் சொல்லவில்லை,” என்று அவன் சொன்னாள். இது மனிதனுடைய குறுகிற இருதயம்.

**கிறிஸ்துவே பரம வளங்களின் நிறைவு**

தேவனுடைய இருதயம் மிகப் பரந்தது. இந்த எல்லா ஐசுவரியங்களையும், செல்வங்களையும், வளங்களையும் கொடுப்பதற்கு தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார் அல்லது ஒரு உபாயம்

வைத்திருக்கிறார். அது என்ன தெரியுமா? கிறிஸ்து. அல்லேலூயா! இதன் அர்த்தம் என்னவென்று கேட்டால் **காணமுடியாத, புலப்படாத, நேரடியாக நாம் அனுபவிக்கமுடியாத தேவனுடைய ஐசுவரி யங்களையும், செல்வங்களையும், வளங்களையும் தேவன் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவில் வைத்திருக்கிறார்.** "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக் கிறது," (கொலோ. 2:9). கிறிஸ்து இல்லாமல் தேவன் தம் செல்வங்களையும், வளங்களையும் மனித னுக்குக் கொடுக்க முடியாது. "தேவன் தம் செல்வங்களையும், வளங்களையும் ஏன் இயேசுகிறிஸ்து வில் வைக்க வேண்டும்?" என்று சிலர் கேட்கலாம். இயேசுகிறிஸ்து என்ற நபரில், இயேசுகிறிஸ்து என்கின்ற உயிர்வாழும் நபரில், அவர் வைத்திருக்கிறார்.

## பவுலின் ஜெபம்

எபேசியர் 3ஆம் அதிகாரம் 14-21வரை உள்ள வசனங்களிலே அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு விலே உள்ள விசுவாசிகளுக்காக ஜெபிக்கிறார். இது பவுலுடைய ஜெபம். இந்த ஜெபத்தை நீங்கள் மனப்பாடம் பண்ணுங்கள். "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனிதனில் வல்லமை யாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்து வினுடைய அன்பின் அகல மும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்".

இதுபோல் நாம் ஜெபம் பண்ணுவோமா? இந்த ஜெபம் பண்ணினாலே கொஞ்சம் செயற்கையாகத் தோன்றும். பொதுவாக நாம் எப்படி ஜெபம் பண்ணுவோம்? "ஆண்டவரே, என் வேதனைகளையெல் லாம் நீர் அறிவீர். ஆண்டவரே, கஷ்டமாக இருக்கிறது. என் இருதயத்தைக் கொஞ்சம் ஆற்றும்". இப்படிப்பட்ட ஜெபம் கொஞ்சம் இயற்கையாக இருக்கிறது. "ஆண்டவரே, உம் சகல பரிபூரணத் தாலும் நிறையப்பட வேண்டும் என்று ஜெபம் பண்ணுவது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது," என்று நாம் நினைப்போம். இது அதிகமாக அல்லது செயற்கையாக இருப்பதுபோல் தோன்றினாலும் சரி, தோன்றா விட்டாலும் சரி, தயவுசெய்து நீங்கள் இப்படியே அந்த முழு ஜெபத்தையும் இந்த வாரத் திலே ஜெபியுங்கள்.

கடைசியிலே அந்த ஜெபம் 'ஆமென்' என்று முடிகிறது.. பத்தொன்பதாம் வசனத்தோடு ஜெபம் முடியவில்லை. 20, 21இலும் ஜெபம் இருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். அவர் அப்படி ஜெபித்துவிட்டு, ஜெபத்திற்குரிய பதிலுக்காக கர்த்தரை துதிக்கவும் செய்கிறார். இந்த வசனம் எனக்கு living பைபிளிலே ரொம்ப பிடிக்கும். "He is able to do far more than we would ever dare to ask or dream of--infinitely beyond our highest prayers, desires, thoughts, or hopes". "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்...நமக்குச் செய்ய வல்லவர்," என்று தமிழ் வேதாகமம் சொல்கிறது. ஆனால், நான் சொன்ன இந்த வேதாகமத்தின்படி, "நாம் வேண்டிக்கொள்கிறதற்கும், கேட்கிறதற்கும், நம்புகிறதற்கும், எதிர்பார்க்கிறதற்கும், கனவுகாண்கிற தற்கும் அதிகமாய்ச் செய்ய வல்ல தம் வல்லமையின்படியே அவர் நமக்குள் கிரியை செய்கிறவர்," என்று மொழிபெயர்க்கலாம். ஆகவே, தேவனுடைய மக்கள் கிறிஸ்துவின் பரிபூரணத்தால் நிறைய வேண்டும், நிரப்பப்பட வேண்டும் என்பது பவுலுடைய ஒரு ஜெபம்.

## நாம் கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தின் சுதந்தரவாளிகள்

இப்போது தேவனுடைய பரிபூரணம் யாருடைய பரிபூரணமாய் மாறிவிட்டது? கிறிஸ்துவின் பரிபூரண மாக மாறிவிட்டது. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் கிறிஸ்துவில் வாசமாயிருக் கிறது. *பரிபூரணம் என்ற வார்த்தைக்கு ஐசுவரியங்கள், செல்வங்கள், வளங்கள் என்று பொருள்.* ஐசுவரியங்கள், செல்வங்கள், வளங்கள் என்னவென்பதை நீங்கள் கண்டுபிடித்துக்கொள்ளலாம். ஆனால், அதை நாம் அனுபவித்து, நமதாக்கிக்கொள்ள வேண்டும்; நாம் அதைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். இந்த எல்லா ஐசுவரியங்களுக்கும் நாம் சுதந்தரவாளிகள். இந்த எல்லா ஐசுவரி யங்களுக்கும் தேவனுடைய மக்களாகிய நாம் சுதந்தரவாளிகள். இது எனக்கு ஆச்சரியமாயிருக் கிறது. தேவனுடைய ஐசுவரியங் களையும், செல்வங்களையும், வளங்களையும் சுதந்தரிக்கிறதற்கு நான் ஒரு சுதந்தரவாளியா? நாம் அவ்வளவு நல்லவர்களா? அவ்வளவு வல்லவர்களா?

சமீபத்தில் நான் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். இப்போது ஐரோப்பாவுக்கு நிறைய அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பாவில் அகதிகளைக்குறித்த பிரச்சினை எழுந்திருக்கிறது. எனவே,

இங்கி லாத்திலுள்ள ஒரு பெரிய பணக்காரர் ஒரு காரியம் சொல்லியிருக்கிறார். கிரேக்கப் பகுதியிலே ஒரு தீவு இருக்கிறதாம். "அந்த முழு தீவை நான் காசு கொடுத்து வாங்கிவிடுகிறேன். இந்த அகதிகள் எல்லாருக்கும் தங்குவதற்கு அங்கு ஒரு தனி நகரத்தையே நான் உண்டாக்குகிறேன்," என்றிருக்கிறார். அப்படியானால் அவர் எவ்வளவு பெரிய பணக்காரராக இருக்க வேண்டும்! ஒரு தீவையே வாங்கி இந்த அகதிகளுக்காக அதை ஒரு நாடாக உருவாக்கிவிடுவாராம். நான் யோசித்துப் பார்த்தேன். நாம் பெரிய அகதிகள்.

### சகல பரிசுத்தவான்களோடுகூடச் சேர்ந்து அறிந்துகொள்ளுதல்

இதில் முக்கியமான வாக்கியம் என்னவென்று கேட்டால் இந்த சகல பரிபூரணத்தாலும் நிறையப்படுவதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. "*சகல பரிசுத்தவான்களோடுங்கூட*" என்று எபேசியர் 3:18இல் வாசிக்கிறோம். அங்கு இங்கு நிபந்தனை உள்ளது. "சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அவருடைய அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும்..." என்றிருக்கிறது. தமிழ் வேதாகமத்தில் கிறிஸ்துவினுடைய **அன்பின்** அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் என்றிருக்கிறது. ஆனால் மூல மொழியாகிய கிரேக்க மொழியில் வாசிக்கும்போது, அகலம் நீளம் ஆழம் உயரம் என்பது கிறிஸ்துவினுடைய அன்புக்கு மட்டும் கொடுக்கப்பட்ட அடைமொழி இல்லை; கிறிஸ்துவுக்கே கொடுக்கப்பட்ட அடைமொழியாகவும் இதை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். அதை, "சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவின் அகலம் நீளம் ஆழம், உயரம் இன்னதென்று அறிந்து..." என்றும் வாசிக்கலாம். என்னே கிறிஸ்துவின் பரிமாணங்கள்! எவ்வளவு பெரிய கிறிஸ்து! எப்பேர்ப்பட்ட கிறிஸ்து! எவ்வளவு மகத்துவமான, உன்னதமான, பரிபூரணமான, நிறைவான, மேன்மையான கிறிஸ்து!

இவருடைய பரிமாணங்களை...அகலம், நீளம், ஆழம், உயரம் ஆகியவைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். எப்படி அறிந்துகொள்ள முடியும்? *சகல பரிசுத்தவான்களோடுங்கூடச் சேர்ந்து*. இதனுடைய பொருள் என்னவென்று கேட்டால் *தேவனுடைய மக்கள் எல்லாரோடும் உறவுகொண்ட நிலையில்தான் நாம் கிறிஸ்துவின் பரிபூரணத்தை அனுபவிக்கவும், சுதந்தரித்துக்கொள்ளவும், நமதாக்கவும் முடியுமேதவிர தனிப்பட்ட முறையிலே கிறிஸ்துவின் பரிபூரணத்தை நாம் சுதந்தரிக்க முடியாது.*

அதற்கு அர்த்தம் நாம் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவை அனுபவிக்கவே முடியாது என்கிற அற்றத்திற்கு நாம் போகவில்லை. தனிப்பட்ட முறையிலே நாம் கிறிஸ்துவை அறியலாம், அனுபவிக்கலாம், சுதந்தரிக்கலாம். ஆனால் அது மிகவும் மட்டுப்பட்டதாக இருக்கும், அது எல்லைக்குட்பட்டது. தனிப்பட்ட முறையில் நாம் கிறிஸ்துவின் நிறைவை, அவருடைய பரிபூரணத்தை, அவருடைய அகலம் நீளம் ஆழம் உயரம் என்ற எல்லாப் பரிமாணங்களிலும் அவரை நாம் அறியவும், அனுபவிக்கவும், சுதந்தரிக்கவும் நமதாக்கிக்கொள்ளவும் முடியுமென்றால், எல்லாப் பரிசுத்தவான்களோடுங்கூட என்கின்ற ஒரு சொற்றொடரை பவுல் பயன்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, தேவனுடைய மக்களோடு நம்முடைய தொடர்பும், உறவும், நட்புறவும், ஐக்கியமும் எப்படி இருக்கிறது என்பதைக் குறித்து நாம் அக்கறையும், கரிசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆகவே, அருமையான சகோதர, சகோதரிகளே! தேவனுடைய மக்களாகிய நாம் தேவனுடைய எல்லா ஐசுவரியங்களையும், செல்வங்களையும், வளங்களையும் சுதந்தரிக்கின்ற சுதந்தரவாளிகளாக அழைக்கப் பட்டிருக்கின்றோம். இது நம் பாக்கியம்! அல்லேலூயா! நாம் இப்பேர்ப்பட்ட ஆராய்ந்தறியமுடியாத கிறிஸ்துவின் ஐசுவரியங்களையும், செல்வங்களையும், வளங்களையும் (எபே. 3:8) சகல பரிசுத்தவான்களோடுகூடச் சேர்ந்து அனுபவிக்க வேண்டும்.

கிறிஸ்துவினுடைய அளவற்ற, ஆராய்ந்துமுடியாத, தீர்ந்துபோகாத ஐசுவரியங்கள்தான் சுவிசேஷமாகும். "இவைகளைப் புறவினத்தாரிடத்தில் அறிவிக்கும்படிக்கு நான் நியமிக்கப்பட்டிருக்கிறேன்," (எபே. 3:8) என்று பவுல் சொல்கிறார். நாம் இவைகளைச் சுதந்தரிக்கின்ற சுதந்தரிவாளிகள் என்பது நம் பரம அழைப்பு. மேற்போக்காக, மேலோட்டமாய் பார்த்தால் இந்தப் பூமியிலே நாம் ஒவ்வொரு நாளும் ஓர் அலுவலகத்திற்குப் போகிறோம், வேலை பார்க்கிறோம். ஆனால், மேற்பரப்புக்குக்கீழ் நாம் இரகசியமாக கிறிஸ்துவின் ஐசுவரியங்களையும், செல்வங்களையும், வளங்களையும் சுதந்தரித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவேதான் நம் வாழ்க்கையிலே ஒருசிலர் கிறிஸ்துவின் சாயலையும், தன்மையையும், குணத்தையும், கட்டமைப்பையும், நறுமணத்தையும் ஓரளவுக்காவது ஒரு மட்டுப்பட்ட விதத்திலாவது நுகர்கிறார்கள். தேவனுடைய மக்கள் எல்லாருடைய வாழ்க்கையிலும், எல்லா இடங்களிலும் நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனையைப் பரப்புகின்றவர்களாக இருக்க வேண்டும். இது முதலாவது. இது தெளிவாகப் புரிகிறதா?

இரண்டவாது, ஆனால், இதை நாம் தனிப்பட்ட விதத்திலே செய்ய முடியாது. தனிப்பட்ட விதத்திலே இந்த ஐசுவரியங்களை ஒரு மட்டுப்பட்ட அளவுக்குத்தான் நாம் சுதந்தரித்துக்கொள்ள முடியும். சகல பரிசுத்தவான்களோடுங்கூடத்தான் எல்லா நிறைவிலும், முழுமையிலும் சுதந்தரிக்க முடியும். தேவன் நம்மை சில பரிசுத்தவான்களோடுகூட இணைப்பார், சேர்ப்பார். தேவன் இணைக்கின்ற எல்லாப் பரிசுத்தவான்களோடும் உறவுகொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

**இயற்கையான தளத்தில் உறவுகள்**

நீங்கள் ஆராய்ந்துபார்க்க ஒரு கேள்வி கேட்கிறேன். சில உறவுகள் தீய உறவுகளாக இருக்கும். அப்படி என்றால் என்ன பொருள்? ஒரு சகோதரி இன்னொரு சகோதரியினிடத்தில் போய், "நீ எனக்கு மட்டும்தான் தோழி. இல்லையா?" என்று சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இந்த உறவுக்கு பெயர் தீய உறவு. "பிரதர், நீங்கள் எனக்குத்தானே ரொம்ப நெருக்கம்," என்று ஒரு சகோதரன் சொன்னால் இது தீய உறவு. இது இயற்கையான தளத்திலே நாம் கொள்கின்ற உறவு. அல்லது "நாம் இரண்டு பேரும் உறவு; அதனால் நான் என்ன சொன்னாலும் நீ 'ஆமாம், ஆமாம்' என்று சொல்ல வேண்டும்.. அப்போதுதான் நீ எனக்குத் தோழன். பிரதர், நான் என்ன சொன்னாலும் நீங்கள் 'ஆமென், ஆமென்' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அதுதான் பிரதர் ஒரு மனம்," என்று ஒருவன் சொன்னால், இந்த உறவில் ஒருவன் தன் சகோதரனை துர்ப்பிரயோகம் பண்ணுகிறான் என்று பொருள். எல்லாவற்றிலும் நாம் 'ஆமென்' சொல்லவேண்டிய அவசியமில்லை. ஒரு நண்பன் என்றால் சில சமயங்களில் அவன் கடிந்துகொள்ள வேண்டும். *"சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்; சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனையுள்ளவை" (நீதி. 27:6)* என்று பிரசங்கி சொல்லுகிறான். அதுபோல, *"ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதைப்பார்க்கிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்" (பிர. 7:5)*. "ஆமாம் பிரதர், நீங்கள் என்ன பேசினாலும் சரிதான், நீங்கள் என்ன செய்தாலும் சரிதான். பிரதர் நீங்கள் என்ன பேசினாலும் சரிதான். ஓ, அல்லேலூயா! என்னே ஐக்கியம்!". இதற்குப் பெயர் ஐக்கியம் கிடையாது. இயற்கையான தளத்திலே லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப்போல பல சங்கங்கள் உள்ளன. ஜாதி அடிப்படையிலே உள்ள உறவுகள், ஊர் அடிப்படையிலே உள்ள உறவுகள், தொழில் அடிப்படையிலே உள்ள உறவுகள் இவைகளெல்லாம் இயற்கையான உறவுகள். தாக்குப்பிடிக்காது.

எல்லாப் பரிசுத்தவான்களோடும் கிறிஸ்துவுக்குள் எப்படி நாம் உறவுகொள்வது அல்லது உறவுகளைக் கட்டியெழுப்புவது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதில் நாம் தேறினவர்கள் அல்ல. எப்படி ஒரு உறவைக் கட்ட வேண்டும்? உறவின் தன்மையை நாம் எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? **அந்த உறவின் தன்மை ஆவிக்குரியதாக இருக்க வேண்டும்; இயற்கையானதாக இருக்கக் கூடாது. கிறிஸ்துவுக்குரியதாக இருக்க வேண்டும்; பூமிக்குரியதாக இருக்கக் கூடாது.**

இந்த இரண்டு எண்ணங்களோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். முதலாவது எண்ணம் *கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியங்களையும், செல்வங்களையும், வளங்களையும் அனுபவிக்கின்ற சுதந்தரவாளிகளாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்*. ஆனால், அதை அனுபவிப்பது தனிப்பட்ட விதத்தில் அல்ல; எல்லாப் பரிசுத்தவான்களோடுங்கூடச் சேர்ந்துதான் அதை நாம் அனுபவிக்க முடியும். எல்லாப் பரிசுத்தவான்களோடும் எப்படி நாம் உறவுகொள்வது? உறவுகொள்வதினுடைய பொருள் என்ன? "ஹலோ பிரதர், ஹலோ சார்" என்று சொல்வது உறவா? உறவாடுதல் என்பதின் நடைமுறை அர்த்தம் என்ன? இதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். நான் சொன்னதை மட்டும்தான் நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பொதுவான கருத்தை நான் சொல்லிவிட்டதால் நான் சொல்லியதை வைத்து நீங்கள் புதிய ஏற்பாட்டைப் படிக்கவும், ஆழ்ந்து படிக்கவும், ஆராய்ந்து பார்க்கவும் தொடங்கலாம். பரிசுத்த ஆவியானவர்தாமே நமக்கு அப்பேர்ப்பட்ட ஞானத்தையும், அறிவையும், ஒழுக்கத்தையும் தருவாராக. ஆமென்.